## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குருநாகல் பிளான்டேசன் லிமிடெட்டின் ("கம்பனி'') 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.

எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தெடர்பான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 138.51 மில்லியன் கிரயமான 32 வாகனங்கள், 106 கமநல வாகனங்கள் மற்றும் 27 மோட்டார் சைக்கிள்கள் என்பன தொடர்ந்தும் ஓட்ட நிலையில் காணப்பட்ட போதிலும், அந்த மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டு | கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டதன் பின்னர் சகல வாகனங்களும் மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டின் போது அந்த செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையிலும் இதுவரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும் 2020 ஆம் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சரியான தேறிய பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் இந்த பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குருநாகல் பெருந்தோட்ட கம்பனிக்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளில் அரசாங்கத்தின் பல்வேறு நோக்கங்களுக்காக விடுவிக்கப்பட்ட 1,750.88 ஹெக்டேயர் காணிகளுக்குரிய குத்தகை செலுத்துகைகள் 2009 ஆம் ஆண்டு முதல் நிறுத்துவதற்கு கம்பனி எடுத்திருந்த தீர்மானத்திற்கு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், அதிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையும் அந்த காணிகளின் அளவுகளுக்குரிய குத்தகை வாடகையான ரூபா 214.21 மில்லியன் தொகை நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய குத்தகை தவணைப் பெறுமதி 1994.12.31 இல் உள்ளவாறு தேறிய சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 1996.06.18 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இந்த கணிப்பீடு செய்தல் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அவசர வேலை கையளித்தல் அலகு (Urgent Issues Task Force) இனால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. காணி விடுவித்தல் அல்லது கட்டுப்பாட்டுக்கு புறம்பாக இருந்தமை அல்லது உள்ளபடியாக பெறப்படாமையின் அடிப்படையில் அல்லது தேறிய சொத்துக்களின் அளவு குறைவடைந்திருந்தது. குருநாகல் பெருந்தோட்ட கம்பனியின் பொறுப்பில் இல்லாத பயன்படுத்தப்படாத குத்தகை சொத்துக்களுக்காக குத்தகைப் பணம் செலுத்துதல் எந்த முறையிலும் தேவையற்றதாகும். அதன் பிரகாரம் இந்த வேறுபாடுகளை சீராக்கியவுடன் குத்தகை தவணைகளை திருத்தப்பட்ட அடிப்படையில் செலுத்துவதற்கு குருநாகல் பெருந்தோட்ட கம்பனி நடவடிக்கை எடுக்கின்றது. எவ்வாறாயினும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மற்றும் திறைசேரியின் பங்குபற்றலுடன் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வினை எடுப்பதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | எதிர்பாராத பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியதுடன், உரிய தீர்மானத்திற்கு வரிசை அமைச்சின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1992 ஆம் ஆண்டில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையில் இருந்து வழங்கப்பட்ட காணிகளில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 15.51 மில்லியன் பெறுமதியான 551 ஹெக்டேயர் காணி அரசாங்கத்தினதும் மற்றும் பல்வேறு பொது தேவைகளுக்காகவும் விடுவிக்கப்பட்ட போதிலும், அந்த விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த காணிகளை அளவிடல் மேற்கொள்ளப்பட்டு எங்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இதுவரையில் கம்பனிக்கு சொந்தமான 87 கூறுகளில் 78 இன் அளவிடல் நடவடிக்கைகள் பெருந்தோட்ட கைத்தொழில் முகாமைத்துவ மேற்பார்வைப் பிரவினால் மேற்கொள்ளப்பட்ட போதும் நில வரைபடங்களின் ஒரு பகுதி எங்களுக்கு கிடைத்ததிருந்தது. மேலும், நில வரைபடத்தின் அளவுகள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு நில அளவையாளர் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நில வரைபடம் எங்களினால் கோரப்பட்ட போதும் இதுவரை கிடைத்திருக்கவில்லை. கம்பனி ஸ்தாபிக்கும் போது நில வரைபடம் பெறப்பட்டிருக்கவில்லை. | விடுவிக்கப்பட்ட காணிகள் தொர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கம்பனியின் மத்திய மட்டத்தில் 10 முகாமையாளர்களுக்காக ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூபா 1,000 வீதம் கூட்டுமொத்தமாக ரூபா 1.2 மில்லியன் சீராக்கல் படிகளுக்கான படியொன்று திறைசேரி அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. | சம்பள முரண்பாடுகளை குறைப்பதற்காக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் MM சம்பள படி நிலைக்காக ரூபா 10,000 படியொன்று வழங்கப்பட்டுள்ளது. | படிகளை செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஆ) | 2009 மே 29 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அல்லது திறைசேரியின் அங்கீகாரம் இன்றி | தற்போது காணப்படுகின்ற அதிக தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் ஊழியர்களை பெற்றுக் கொள்ளும் போது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போதும் கம்பனியின் சிரேஷ்ட மட்டத்திலும் பதவி நிலை உத்தியோகத்தர்களும் என 36 பேர்களுக்காக தோட்ட தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்காக செலுத்த வேண்டிய ரூபா 13.24 மில்லியன் தொகையான ஊழியர் சம்பளம், அவ்வாறே தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தாமல் பணமாக மாற்றக் கூடிய ஊழியர் படிகளாக உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், ஊழியர் சேமலாப நிதியம், பணிக் கொடை கொடுப்பனவுகள், ஊக்குவிப்பு படிகள், மிகை ஊதியப் படிகள், மருத்துவ உதவி படிகள், விடுமுறை வேதனங்களுக்கான மேலதிக செலவினங்களையும் கவனத்தில் கொண்டு நிறுவனத்திற்கு நிதி ரீதியான நலனொன்றை பெற்றுக் கொள்ளும் வகையில் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இந்த உரித்துக்கள் 2010 ஆம் ஆண்டு முதல் பணமாக செலுத்தப்படுகின்றது. | வேண்டும். |
| (இ) | 2015 மே 25 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனங்கள் உரித்தற்ற பிராதன அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஐந்து உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ வாகன வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1.32 மில்லியன் எரிபொருள் செலவினமும் செய்யப்பட்டிருந்தது. | அரசாங்க உத்தியோகத்தர்களின் / நீதிமன்ற உத்தியோகத்தர்களின் / அரசாங்க கூட்டுத்தாபனங்கள் / நியதிச் சட்ட சபைகளின் உத்தியோகத்தர்களுக்காக உத்தியோகபூர்வ வாகன வசதிகளை வழங்குதல் தொடர்பாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 22/99 இன் 1.1.6 ஆம் பிரிவின் கீழ் இது குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 120,170,906 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 221,411,803 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 101,240,897 இனால் வீழ்ச்சி அடைந்திருந்தது. விற்பனை வருமானம் ரூபா 114,084,425 இனால் குறைவடைந்திருந்ததுடன், விற்பனைக் கிரயங்கள் ரூபா 30,056,848 இனால் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின போக்குகளின் பகுப்பாய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் தெங்கு உற்பத்தி 32 சதவீதத்தினாலும், தேங்காய் ஒன்றின் சராசரி விற்பனை விலை 43 சதவீதத்தினாலும் குறைவடைந்தமையின் காரணமாக கம்பனியின் ஒட்டுமொத்த தெங்கு விற்பனை வருமானம் 24 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. எனினும் தெங்கு உற்பத்தி கிரயத்தை கட்டுப்படுத்துவதற்கு கம்பனி தவறியமையினால் அது 5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அவ்வாறே முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கொப்பரா விற்பனை வருமானம் 141 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், தென்னங்கன்றுகளின் விற்பனை வருமானம் 51 சதவீத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கம்பனியின் இறப்பர் பால் உற்பத்தி 7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கம்பனி சீட் இறப்பர் உற்பத்தி வரையறுக்கப்பட்டு பச்சை பால் விற்பனைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டமையினால் சீட் இறப்பர் உற்பத்தி 76 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், இறப்பர் பால் விற்பனை வருமானம் 97 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கம்பனி பச்சை இறப்பர் பால் விற்பனைக்கு முன்னுரிமை வழங்கியிருந்த போதும், இறப்பர் சார்ந்த உற்பத்தி கிரயத்தை கட்டுப்படுத்தாமையினால் அந்த கிரயங்கள் 12 சதவீத்தினால் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 19.31 மில்லியன் கிரயமான அத்தனகல்ல தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட இறப்பர் தொழிற்சாலை 2018 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டமையினால் இதன் இயந்திரங்கள், பொறிமுறைகள் மற்றும் ஏனைய சொத்துக்களை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன், தொழிற்சாலையின் பராமரிப்பு மற்றும் பாதுகாவலர்களின் சம்பளங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 456,507 தொகையான பராமரிப்பு செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு முன் நிதி ரீதியான அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன், அந்த சந்தர்ப்பத்தின் போது புகை பிடிக்கப்பட்ட சீட் கிலோ அலகின் இலாபம் கவனத்தில் கொள்ளப்பட்டு பணிப்பாளர் சபையினால் இந்த நிர்மாணத்திற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் விரைவாக குறைவடைவதற்கு உட்பட்ட இறப்பர் விலையின் காரணமாக புகை பிடிக்கப்பட்ட இறப்பர் சீட் உற்பத்தியை விற்பனை செய்வதை விட இறப்பர் பால் கேள்வி கோரலின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட கொள்வனவாளருக்கு வழங்குவதன் மூலம் உற்பத்தி கிரயத்தை கட்டுப்பத்துவதாக கருதி இறப்பர் தொழிற்சாலையின் உற்பத்தி | தொழிற்சாலையினைப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு 2018 செப்தெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. | |

**3.2 பெறுகைகள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 4.5 மில்லியன் செலவில் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் இயலுமை மற்றும் மாற்றுவழியாக கட்டிடமொன்றை கம்பனிக்கு சேர்த்துக்கொள்ளும் இயலுமை என்பன ஆராயப்படாமல் பழைய உள்ள கணக்காய்வு முகாமையாளரின் உத்தியோகபூர்வ இல்லம் திருத்தப்பட்டிருந்ததுடன், இந்த பழுதுபார்த்தலின் போது ரூபா 616,988 தொகையான செலவினத்தில் நிர்மாணிக்கப்பட்ட கூரைகள், கதவுகள், யன்னல்கள், டைல் பதித்தல் மற்றும் கூரை மேவுகைகள் போன்ற பல்வேறு நிர்மாணங்களில் குறைபாடுகள் காணப்பட்டன. ரூபா 2.74 மில்லியன் செலவில் முத்துக்கல தோட்ட பகுதியின் நிலைய பொறுப்பு உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் போது ஒப்பந்த காலத்தை விஞ்சி 21 மாதங்கள் நிர்மாணங்கள் தாமதமாகி இருந்ததுடன், சுவர், சமையறையில் கழுவும் பேசன் என்பன சரியான முறையில் பொருத்தப்படாமையினால் நிர்மாணத்தில் குறைபாடுகள் காணப்பட்டன. திப்பிலிதென்ன உத்தியோகபூர்வ இல்லமொன்று நிர்மாணிப்பதற்காக 2019 திசெம்பர் 13 ஆம் திகதி தனியார் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட ரூபா 479,880 தொகையான முற்பண தொகை ஒப்பந்தத்தின் வேலை ஆரம்பிக்கப்படாமல் கணக்காய்வு திகதியான 2020 யூன் 16 ஆம் திகதி வரையிலும் ஒப்பந்தகாரரினால் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | பிரதி பொது முகாமையாளருக்கு உத்தியோகபூர்வ இல்லம் காணப்படாமையின் காரணமாக வாடகை அடிப்படையில் அருகில் உள்ள வீடொன்றில் குடியிருப்பதற்கு ஏற்பட்டமை, கணக்காய்வு முகாமையாளர் 2018 சனவரி மாதம் முதல் சேவையில் இருந்து விலகிச் சென்றமையினால் அவரினால் பயன்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் ஒரு வருட காலம் முதல் மூடப்பட்டிருந்தமை மற்றும் புதிய கணக்காய்வு முகாமையாளருக்கு உத்தியோகபூர்வ இல்லமொன்றின் தேவையொன்று ஏற்படாதிருந்தமை. அந்த கட்டிடத்தை நவீன மயப்படுத்த முடியுமாயின் புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதை விட குறைந்த செலவில் அதனை நிறைவேற்றுவதற்கு முடியுமாக இருந்தமை. முன்னர் காணப்பட்ட கூறு விலைகள் பகுப்பாய்வு செய்த போது புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 6.5–7.00 மில்லியன் செலவினம் ஒன்றைச் செய்வதற்கு கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. | கட்டிடத்தின் பழுது பார்த்தல் பொருளாதார மற்றும் ஆக்கபூர்வமானதாக மேற்கொள்வதற்கு கண்காணித்துக் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகைகள் முகவராண்மை சுற்றறிக்கையின் 4.2.1(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்கு திட்டமிடப்பட வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் கம்பனி மீளாய்வாண்டிற்கு மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரித்திருந்தது. | கம்பனி கமநல நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு அமுல்படுத்துகின்ற கம்பனியாக இருந்தமையினால் பிரயோக ரீதியில் 03 வருட காலத்திற்காக பெறுகைத் திட்டமொன்றை தயாரித்தல் வசதியீனமாக இருந்தது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இது தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு உரிய பெறுகைத் திட்டம் 03 வருட காலத்திற்காக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |